**Dated : 21.01.2026**

**O.S.No. 46/2024**

**DW.1 – திரு. ஜெயபால்**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள வழக்கு விவரங்கள் எனக்கு தெரியும். வாதி ராஜாராம் என்னுடைய தம்பி, அவர் ஓசூரில் வேலை பார்த்து வருகிறார் என்றால் சரிதான். 1974ல் என்னுடைய தகப்பனார் தாவா சொத்தினை கிரயம் பெற்றார் என்றால் சரிதான், அது ஏற்கனவே குறியிடப்பட்ட வா.சா.ஆ.1 ஆகும். இந்த தாவா சொத்து எனக்கும், வாதிக்கும் பாத்தியப்பட்ட சொத்து என்று நான் தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன். என் அப்பா எனக்கும், என் தம்பிக்கும் சேர்த்து பதிவு செய்யப்பட்ட தானபத்திரம் ஒன்று எழுதிவைத்தார் என்றால் சரிதான், அது வா.சா.ஆ.2 ஆகும். அதை நானும் என் தம்பியும் கூட்டாக அனுபவித்து வந்தோம் என்றால் சரிதான். என்னுடைய தகப்பனார் 2017ல் 3வது மாதம் 30ம் தேதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். நானும், என் தம்பியும் தாவா சொத்தில் அவரவர் பாகத்தை பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான். அவரவர் நிலத்தில் பயிர் செய்து அதற்கான கந்தாயம் செலுத்து வருகிறோம் என்றால் சரிதான்.

நாங்கள் நட்ட தென்னை மரம் அவரவர் பாகத்திற்கு உரியதாக அனுபவித்து வருகிறோம். என்னுடைய தம்பி 2010ல் அவருடைய பாகத்தில் கிணறு ஒன்று வெட்டினார், அந்த கிணறு என் தம்பி பாகத்திற்கு சென்ற காரணத்தினால் அவருக்கு அந்த கிணறு ஒதுக்கப்பட்டது, அதற்கு பதிலாக என்னுடைய தகப்பனார் அவருடைய கிணற்றை எனக்கு ஒதுக்கி கொடுத்தார், அதை அவ்வாறு தான் நாங்கள் அனுபவித்து வருகிறோம். என் தம்பி மற்றொரு கிணறு ஒன்றை வெட்டினார் என்றால் வெட்டினார், அது வெட்டி சுமார் 6 வருட காலங்கள் இருக்கும். அது அவருடைய பாகத்தில் தான் அவர் வெட்டினார், அதற்கு மின் இணைப்பும் அவருடைய பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். அவ்வாறு நாங்கள் பிரித்துக்கொண்டதற்கு ஆதாரம் ஏதேனும்

எழுதிக்கொண்டோமா என்றால் கிராமத்தில் அவ்வாறு ஆதாரம் எழுதிக்கொள்வதில்லை. வாதியால் அவரால் வெட்டப்பட்ட கிணறுக்கு முழு பாத்தியமும் அவருக்கு மட்டுமே உரிமை உள்ளது என்றால் சரிதான்.

**வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்பட்டது.**

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

LATHA V R Digitally signed by LATHA V R

Principal District Judge,

Krishnagiri.